பக்கங்கள்:-16

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 18 | வியாழக்கிழமை | 02.01.2025 | அதிர்வு 153

## குழந்தை பிறப்பு நாட்டில் வீழ்ச்சி!

இலங்கையில் வருடாந்த பிறப்பு வீதம் கணிசமான வீழ்ச்சியை பதிவு செய்துள்ளதாக குழந்தை நல மருத்துவ ஆலோசகர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

05





### முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பைக் குறைப்பது போல்

# தமிழர் தாயகத்தில் படைகளின் பிரசன்னத்தைக் குறையுங்கள்!

### தமிழரசுப் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கோரிக்கை

"தற்கால, முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய பாதுகாப்பு இப்போது குறைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லையென்ற நிலையில்தான் அது குறைக்கப்பட்டு வருகின்றது என்று கூறப்படுகின்றது.

இந்தநிலையில் இங்கேயும் அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடுகள் ஏதும் முன்னெடுக்கப்படுமென்ற வாய்ப்புகள் இல்லை. வசதிகள் இல்லை. அப்படி எதனையும் எதிர்பார்க்கவும் முடியாது. அந்த வகையில் பாதுகாப்பற்ற நிலை இலங்கையிலேயே இல்லையென்றால், எங்களுடைய பிரதேசங்களிலே இராணும் எங்களது நிலத்தை ஆக்கிரமித்து தொடர்ந்தும் வைத்திருப்பது ஏன்? ஆகவே, தமிழர் தாயகத்தில் படைகளின் பிரசன்னத்தைக் குறையுங்கள்!"

- இவ்வாறு கேள்வி எழுப்பியியிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

05

# 'கிளீன் சிறிலங்கா' நடவடிக்கையைப் போல இனப்பிரச்சினையையும் கிளீன் செய்யுங்கள்!

### சிறீதரன் எம்.பி. அரசிடம் கோரிக்கை



"கிளீன் சிறிலங்கா" போன்று இனப் பிரச்சினையையும் இந்த அரசாங்கம் "கிளீன்" செய்ய வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மலர்ந்திருக்கும் புதுவருடம் இன ஒற்றுமையுடன் கூடிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் அவர்களின் இலக்கை அடையும் புதுவருடமாக அமையும் என்ற எதிர்பார்ப்போடு காலடி எடுத்து வைக்கின்றோம். இலங்கை நாட்டில் வருமானம் தரக்கூடிய பொருளாதாரம் இல்லை. பொருந்தோட்ட பொருளாதாரமும் இல்லை. சுற்றுலாப்பயணிகளின் வருகையை மட்டும்தான் பார்த்திருக்கிறார்கள்.

இலங்கை உலக

05




அவர் தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளர். ஆயினும் அக்கட்சி குறித்து அவ்வப்போது காட்டமாக கருத்து வெளியிட்டு விமர்சித்து வருபவர்.

தொலைபேசியில் என்னுடன் பேசினார்.

"கட்சியின் தலைமைத்துவம் பகீரதப் பிரயத்தனத்தின் மூலம் மாற்றப்பட்டுள்ளது. செயலற்றுப் போன தலைவரின் கைப்பிடியில் இருந்து கட்சி விடுவிக்கப்பட்டிருக்கின்றது. இனி கட்சி நிர்வாக ரீதியில் மீண்டெழுமா?" – என்று கேட்டேன்.

"தமிழரசு என்றால் அ.தி.மு.கதானே...!" – என இழுத்தபடி சுவாரஸ்யம் இல்லாமல் பதில் தந்தார் அவர்.

ஆயினும் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா காலத்தில் கொடிகட்டிப் பறந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்றும் – இப்போதும் – பல பிரிவுகள், பிளவுகளின் பின்பும் – கட்டுறுதியாக இருப்பதை முன்னுதாரணமாகக் காட்டி, தமிழரசுக் கட்சியை அவர் சிலாகிக்கின்றார் என எண்ணிக் கொண்டு –

"அப்படியா அ.தி.மு.கவுடன் ஒப்பிட

05

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# பஸ் கட்டணம் அதிகரிக்கப்படும்

எதிர்வரும் ஜுலை மாதத்திற்குள் பஸ் கட்டணங்கள் கணிசமான அளவு அதிகரிக்கப்படும் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“புதிய அரசாங்கத்தின் நிர்வாகத்தைத் தொடர்ந்து புத்தாண்டின் தொடக்கத்தில் எரிபொருள் விலை குறையும் என எதிர்பார்த்தோம். ஆனால், அந்த நம்பிக்கை தற்போது கனவாக மாறியுள்ளது.

பஸ் கட்டணம் குறைக்கப்பட வேண்டுமானால், ஒரு லீட்டர் டீசலின் விலையை குறைந்தது 30 ரூபாவாக குறைக்க வேண்டும்.

மேலும், எரிபொருள் விலை மட்டுமன்றி, உதிரிப் பாகங்கள் மற்றும் இதர உபகரணங்களின் விலையும் குறைய வேண்டும்.

தனியார் பஸ் சேவை தற்போது நெருக்கடியான நிலையில் உள்ளது.

எனவே, செலவுகளை நிர்வகிக்க இந்த ஆண்டு ஜுலை மாதத்திற்குப் பின், பஸ் கட்டணத்தைக் கணிசமான அளவு அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும்.”– என்றார்.




# காங்கேசன் – நாகை இடையே கப்பல் சேவை 6 ஆம் திகதியே

காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறாது எனக் கப்பல் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காலநிலை சீரின்மை காரணமாக காங்கேசன்துறை – நாகபட்டினம் இடையிலான கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் மீண்டும் இன்றையதினம் பயணிகள் கப்பல் சேவை இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டது.

இருப்பினும் காலநிலை சீரின்மை காரணமாக இன்றைய தினம் கப்பல் சேவை இடம்பெறாது என்றும், எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதியே பயணிகள் கப்பல் சேவை இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.




# சிறுவர்கள், கர்ப்பிணி தாய்மார்களை விளம்பரத்திற்குப் பயன்படுத்த தடை

சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களை விளம்பரத்திற்குப் பயன்படுத்துவதற்கு நேற்று முதல் அமுலாகும் வகையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸவின் கையொப்பத்துடன் அண்மையில் வெளியிடப்பட்டது.

1980 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க உணவுச் சட்டம் தொடர்பான உணவு பொதியிடல் மற்றும் விளம்பரப்படுத்தல் உத்தரவு உள்ளிட்ட பல உத்தரவுகள் புதிய வர்த்தமானி ஊடாக திருத்தப்பட்டுள்ளன.

இதன்படி, குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவுகள் மற்றும் குழந்தைகளுக்குப் பால் சார்ந்த உற்பத்திகளின் விளம்பரங்களில் சிறுவர்களைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

உணவு தொடர்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கர்ப்பிணித் தாய்மார் அல்லது பாலூட்டும் தாய்மார், குழந்தை அல்லது 12 வயதுக்கும் குறைவான சிறுவர்கள் தோன்றும் காணொளி அல்லது படங்களை அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் அல்லது வேறு வகையில் விளம்பரப்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அனுமதியின்றி நேரடியாகவோ மறைமுகமாகவோ 12 வயதுக்குக் குறைவான சிறுவர்களுக்கு, குறிப்பிட்ட உணவுடன் வழங்கப்படும் துண்டுப்பிரசுரம், இலவசமாக வழங்கப்படும் மாதிரிகள், பொருள்கள் மற்றும் விளையாட்டுப் பொருள்கள், கார்ட்டூன் பொருள்கள் ஊடாக அல்லது பிரபலமான நபர்களைக் கொண்டு உணவு தொடர்பான விளம்பரப்படுத்தல்களை முன்னெடுக்க முடியாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ். மேலதிக அரச அதிபர் நியமனம் ஜனாதிபதி, பிரதமருக்கு முறைப்பாடு!

(ந.லோகதயாளன்)

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் நியமனம் தொடர்பில் பாதிக்கப்பட்ட நிர்வாக அதிகாரிகள் ஒப்பமிட்டு ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு முறையிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிலவிய மேலதிக அரச அதிபர் வெற்றிடத்திற்காக புதிதாக ஒருவர் கடந்த திங்கள்கிழமை நியமிக்கப்பட்டார்.

மேலதிக அரச அதிபராக நியமிக்கப்பட்ட நிர்வாக சேவை தரம் 1ஐச் சேர்ந்த அதிகாரியை விடவும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் கீழான நிர்வாகத்தில் மட்டும் 10 அதிகாரிகள் இருக்கின்றனர் எனவும், அவர்களை கருத்தில் எடுக்காது 11 ஆவது இடத்தில் உள்ள ஓர் அதிகாரியை நியமித்துள்ளமை தொடர்பிலேயே ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் முறையிடப்பட்ட முறைப்பாட்டுக் கடிதத்தில் சேவை மூப்பில் உள்ள நிர்வாக சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த 8 அதிகாரிகள் ஒப்பமிட்டுள்ளனர் எனத் தெரிகின்றது.

# நாமல் குமாரவிற்கு விளக்கமறியல்



கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்ட சமூக செயற்பாட்டாளரான நாமல் குமார விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜனவரி 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வாக்குமூலம் வழங்குவதற்காகக் குற்றத்தடுப்பு பிரிவில் நேற்று முன்னிலையான போது அவர் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




# போக்குவரத்து விதிகளை மீறிச் செயற்பட்ட 7,264 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை

நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியால காலப்பகுதியில் போக்குவரத்து விதிகளை மீறிய 7,264 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் மது போதையில் வாகனம் செலுத்திய 529 சாரதிகளுக்கும், கவனக்குறைவாகவும் ஆபத்தான முறையில் வாகனம் செலுத்திய 57 சாரதிகளுக்கும்,

அதிவேகமாக வாகனம் செலுத்திய 54 சாரதிகளுக்கும், போக்குவரத்து விதிகளை மீறிய 1,057 சாரதிகளுக்கும், உரிமத்தை மீறிய 614 சாரதிகளுக்கும் ஏனைய போக்குவரத்து விதிகளை மீறிய 4,953 சாரதிகளுக்கு எதிராகவும் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலங்களில் வாகன விபத்துக்களைக் குறைக்கும் நோக்கில் பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் கடந்த மாதம் 23ஆம் திகதி முதல் இந்த விசேட போக்குவரத்து நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# எதிர்வரும் நாள்களில் நெல்லுக்கு உத்தரவாத விலை



எதிர்வரும் நாள்களில் நெல்லுக்கான புதிய உத்தரவாத விலை அறிவிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கிறது.

விவசாயம் மற்றும் கால்நடை வளத்துறை பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

உர நிவாரணம் வழங்கப்படாத விவசாயிகளுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வாரத்திற்குள் அதனைப் பெற்று கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்த பெரும்போகம் ஆரம்பமாவதற்கு முன்னர் உர மானியத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாயம் மற்றும் கால்நடைவளத்துறை பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூடிய அளவுக்கு தமிழரசுக் கட்சி ஸ்திரமாக உள்ளதா?" என்று அப்பாவித்தனமாக – ஆச்சரியத்துடன் – கேட்டேன் நான்.

அவர் விழுந்து விழுந்து சிரித்தார்.

"நான் கூறும் அ.தி.மு.க. என்பது அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் அல்ல. 'அடித்தும் திருத்த முடியாத கழுதை' என்பதுதான் நான் குறிப்பிட்ட அ.தி.மு.க. என்பதன் கருத்து" – என்றார் அவர்.

நான் விக்கித்து வாயடைத்துப் போனேன். ஒரு வகையில் அது சரி போலவும் பட்டது.

\+ \+ \+

இனி வருவது என்னுடைய கருத்தல்ல. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்வீட்டு விடயத்துக்குள் அநாவசியமாக மூக்கை நுழைத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்த கருத்துக்கு கனடாவிலிருந்து பெரியவர் நக்கீரன் காட்டிய பிரதிப்லிப்பு இது:–

"கபட வேடதாரியே! முதலில் உங்கள் கண்ணிலிருந்து அம்மரத்துண்டை அகற்றுங்கள். பின்னரே, உங்கள் சகோதரனின் கண்ணிலிருந்து தூசியை அகற்ற முன்வாருங்கள்! (Thou hypocrite, first cast out the beam out of thine own eye; and then shalt thou see clearly to cast out the mote out of thy brother's eye.)

திருவாளர் கஜேந்திரகுமார் தனது கட்சியை விட்டுவிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்வீட்டுச் சிக்கல்பற்றி உபதேசம் செய்கிறார். தேர்தலில் வெற்றி தோல்வி இயல்பானதாகும். இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு கடந்த தேர்தலைவிட இம்முறை குறைந்த வாக்குகளே கிடைத்துள்ளன. இதனால் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் இரண்டாவது இடத்துக்கு வந்தும் வெற்றிவாய்ப்பை (சுமந்திரன்) இழந்துள்ளார். அதை வைத்துக் கொண்டு "மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலரின் ஆதிக்கத்தைக் கட்சி தொடர்வது ஒரு மோசமான கொள்கை ரீதியான பாதையில் தமிழ்த் தேசிய அரசியலைத் தள்ளும்" என்கிறார்.

சரி. அவரது கட்சியின் இலட்சணம் என்ன? அவரது கட்சியும் படுதோல்வி தான் அடைந்துள்ளது. கடந்த 2020 தேர்தலில் 55,303 வாக்குகள் வாங்கிய தமிழ்க் காங்கிரஸ் இம்முறை சரிபாதி 27,986 (8.60 விழுக்காடு) வாக்குகளே பெற்றுள்ளது. அப்படியென்றால் பொது மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரனை – அவரதுவாதத்தின்படி–தள்ளிவைக்ககஜேந்திரகுமார் அணியமா? தேசியம் பற்றிப் பேசுகிறார் – இவர் என்ன தேசியத்தை குத்தகைக்கு எடுத்து வைத்திக்கிறாரா? தமிழ்க் காங்கிரஸின் வரலாறு ஒரு துரோக வரலாறு. மலையகத் தமிழரின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டதை ஆதரித்து வாக்களித்த கட்சி. ஒரு மீன்பிடி அமைச்சர் பதவிக்கு 8 இலட்சம் மலையகத் தமிழர்களை அரசியல் அநாதைகளாக – குடியுரிமையற்றவர்களாக – ஆக்கிய கட்சி. இலங்கைத் தமிழரசுக் கட்சி இணைப் பாட்சி கேட்டுப் போராடிய போது காங்கிரஸ் கட்சி ஒற்றையாட்சிக்கு வாதாடிய கட்சி. திருகோணமலையில் தமிழர்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி பாடுபட்ட போது யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டும் என்று மதவாதம் பேசிய கட்சி. அது சரி. அந்தக் கட்சியில் சனநாயகம் இருக்கிறதா? பாட்டன், பாட்டனுக்குப் பின்னர் மகன், மகனுக்குப் பின்னர் பேரன் என அந்தக் கட்சி பொன்னம்பலத்தின் குடும்பச் சொத்தாகத்தானே இருந்து வருகிறது? இப்போது கூடப் பகலில் இந்திய எதிர்ப்பு நிலையை எடுத்துக் கொண்டு இரவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு காதல் கடிதம் எழுதுகிறார் கஜேந்திரகுமார். இந்திய சார்பு நிலையை எடுக்கும் மற்றக் கட்சிகளை இந்தியாவின் 'கைத்தடிகள்!', 'அடிவருடிகள்!', 'அடிமைகள்!' என்று வசை பாடுகிறார்.

இப்போதும் சரி, அப்போதும் சரி காங்கிரஸ் கட்சி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் மட்டும் குதிரை ஓட்டும் ஒரு கட்சிதான். கஜேந்திரகுமார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்வீட்டுச் சிக்கலில் தலையிடாது தனது வேலையைப் பார்த்துக் கொள்வது அவருக்கும் நல்லது. அவரது கட்சிக்கும் நல்லது.

– இது நக்கீரனின் கருத்து. கவனிக்கத் தக்கது.

தெரிவான தமிழ் எம்.பிக்களை மட்டும் வைத்துக் கொண்டு, 'குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டலாம்' என்று எண்ணுகின்றாரோ கஜேந்திரகுமார்...?

---

## தமிழர் தாயகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்திருக்கின்றமை வருமாறு:–

ஆட்சிக்கு வந்திருக்கும் அநுர அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டை நாங்கள் எடுக்கவில்லை. நடுநிலைமையான நிலைப்பாட்டிலேயே நாங்கள் இப்போது இருக்கிறோம்.

எந்த அரசாங்கம் வந்தாலும் அவர்கள் புதிய அரசாங்கம்தான்.

நாங்கள் தமிழினமாக – தனித்துவமான அடையாளங்களோடு –இருக்க வேண்டும் என்பது எங்களுடைய கொள்கையாக உள்ளது. இதில் முக்கியமாக எங்கள் நிலம், மொழி, கலாச்சாரம் உள்ளிட்ட விடங்களில் தனித்துவத்தை நிலைநாட்டுகின்ற அரசியலை நாம் செய்து வந்திருக்கிறோம்.

இப்பொழுது தற்கால, முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய பாதுகாப்பு குறைக்கப்பட்டு உள்ளது. ஏனெனில் அவர்களுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லையென்ற நிலையில்தான் அது குறைக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் இங்கேயும் அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடுகள் ஏதும் முன்னெடுக்கப்படுமென்ற வாய்ப்புகள் இல்லை. வசதிகள் இல்லை. அப்படி எதனையும் எதிர்பார்க்கவும் முடியாது.

அந்த வகையில் பாதுகாப்பற்ற நிலை இலங்கையிலே இல்லையென்றால், எங்களுடைய பிரதேசங்களிலே இராணும் எங்களது நிலத்தை ஆக்கிரமித்து தொடர்ந்தும் வைத்திருப்பது ஏன்? இச்செயற்பாட்டால் மக்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மூன்றில் ஒரு பகுதியை படைகள் ஆக்கிரமித்து வைத்து இருக்கின்றன. இவற்றை விடுவிப்பதன் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளலாம்.

ஆகவே, அரசாங்கம் இவற்றைக் கருத்திற் கொண்டு, வடகிழக்கில் முப்படைகளும் ஆக்கிரமித்து வைத்துள்ள தமிழ் மக்களின் நிலங்களை விடுவிக்க வேண்டுமென்று கட்சி ரீதியாக கோரிக்கையை முன்வைக்கிறேன்.

தமிழரசுக் கட்சிக்குள் உட்கட்சி விமர்சனங்கள், குறைபாடுகள் தொடர்பில் சில பேர் பேசி வருகின்றார்கள். கட்சிக்குள் உட்கட்சி பிரச்சினையோ வேறு ஏதும் பிரச்சினையோ வந்தாலும் நாங்கள் அவற்றை சமாளித்து சீராக்கி முன்னேறி இருக்கிறோம் என்பதை கடந்த காலத்தில் மக்கள் பார்த்திருப்பார்கள்.

அந்த வகையில் கட்சிக்குள் உள்முரண்பாடுகள் அல்லது எதிர்ப்புக்களை சுமூகமாகத் தீர்த்துக் கொண்டு முன்னேறி ஒரு கட்சியாக கட்டுக்கோப்புடன் தமிழரசு செயற்படும். அதற்கான செயற்பாடுகள் நடந்திருக்கின்றன. அத்தகைய நடவடிக்கைகள் தொடந்தும் முன்னெடுக்கப்படும் என்பதை உறுதியாகச் சொல்லி வைக்கிறேன்.

75ஆண்டுகாலவரலாற்றைக்கொண்ட எங்களுடைய தமிழரசுக் கட்சியை கட்டிக் காப்பதற்கும் அதை முன்நோக்கி கொண்டு செல்வதற்கும் எல்லா மக்களுடைய ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியம்.

ஆனாலும் கட்சிக்குள் எங்களிடையெர் சில குறைபாடுகள் இருக்கலாம். ஆகவே அவற்றை மேவி, தனித்துவமான ஒரே கட்சியாக எங்கள் கட்சி இருப்பதால் அதை ஆதரித்து, எங்களுடைய அரசியலை முன்கொண்டு செல்ல மக்கள் உதவ வேண்டும் அல்லது முன்வர வேண்டும். இதற்கு நியாயமான கருத்துக்களையும் நான் எதிர்பார்க்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் அண்மைக்காலமாக கட்சி தொடர்பில் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை உண்மைதான். ஆனால் இந்த விமர்சனங்களுக்கு நான் பதிலளிப்பது கிடையாது.

ஆனால் அதிலும் சிலர் நியாயங்களையும் சொல்லி பதிலளித்து வருகின்றமையைப் பார்க்கின்ற போது இந்த மண்ணிலே நியாயங்கள் நிலைநிறுத்தப் படுகின்றன என்பதை உணர்ந்து அவர்களுக்கான நன்றியையும் தெரிவித்து கொள்கிறேன்.

எமது தமிழரசுக் கட்சியின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பவள விழாவைக் கொண்டாட இருக்கிறோம். அந்த விழா இந்த முறை மட்டக்களப்பிலே நடத்த ஏற்பாடாக இருக்கிறது. அதே நேரம் மாவட்ட ரீதியாகவும் நிகழ்வுகளை சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்கிறோம்.

ஆகவே எமது மக்கள் ஒத்துழைப்பை வழங்கி வெளிப்படையாக முன்வந்து எங்களுடைய கட்சியை ஆதரிக்க வேண்டும். அதன் மூலமாக இந்த நாட்டிற்கும் சர்வதேசத்திற்கும் மீண்டுமொரு செய்தியை சொல்லலாம்.

அதாவது தமிழரசுக் கட்சி தமிழ் மக்கள் சார்பாக பேசக்கூடிய அதிகாரம் பெற்றது, ஆணைபெற்றது என்பதைதொடர்ந்து வரும் தேர்தல்களின் மூலம் நிரூபிக்கலாம் என்பதைக் குறிப்பிட்டு, அதற்காக மக்களிடத்தே ஆதரவையும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறது என்றார்.

நிலத்திலும் புலத்திலும் உள்ள உறவுகளுக்கு என் சார்ந்த்தும் எமது கட்சி சார்ந்த்துமாக மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கிறேன்.

அதே நேரம் ஒரு அலையாக வெற்றி பெற்று இப்போது ஆட்சியல் அமர்ந்திருக்கும் அநுரகுமார திஸநாயக்க அவர்களிற்கும் அவருடைய அரசாங்கத்திற்கும் கூட எங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்து கொள்ள விரும்புகிறோம்.

அதேநேரம் இந்த ஆண்டிலாவது 75 ஆண்டுடைய எங்கள் கட்சியின் வரலாறு இருக்கிறது. போராட்டம் அல்லது தமிழ் மக்களுடைய உரிமை சார்ந்த முன்னெடுப்புக்கள் தொடர்ந்து வந்திருக்கின்றன.

ஆகவே எங்களுடைய அபிலாசைகளை – இலக்குகளை – தெரிந்து கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸ்நாயக்கவின் அரசாங்கமும் இனப் பிரச்சனைக்கு சுமூகமான முறையில்

06

# தீர்வு காண விரைந்து நடவடிக்கை எடுங்கள்

## அநுரவிடம் மனோ வலியுறுத்து



இலங்கை மக்கள் வழங்கியுள்ள ஆணையைப் பயன்படுத்தி தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மலையகம் என அனைத்து பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு கிடைக்கப் பெற்றுள்ளது. அனைத்து இன மக்களின் ஆசியுடன் ஆட்சி அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறு மக்கள் வழங்கியுள்ள ஆணையை பயன்படுத்தி பொருளாதாரப் பிரச்சினை மற்றும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்கள் என்னை நிராகரிக்கவில்லை. நாடாளுமன்றம் தெரிவாவதற்குப் பெற வேண்டிய வாக்குகளைப் பெறவில்லை என்பதே உண்மை. நான் சுமார் 20 ஆயிரம் வாக்குகளை எடுத்தேன். சில மாவட்டங்களில் 5 ஆயிரம் வாக்குகளைப் பெற்றவர்கள் நாடாளுமன்றம் சென்றனர். இதுதான் இந்தத் தேர்தலை முறைமை.

அதேவேளை, சிஸ்டம் சேன்ஸ் என்பதை அரசு மலையகத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்." - என்றார்.

# நீதிபதிகளுக்கு அதிரடி இடமாற்றம்

நீதிச் சேவை ஆணைக்குழுவினால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீதிவான்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி கொழும்பு பிரதான நீதிவானாகக் கடமையாற்றிய திலின கமகே மொரட்டுவை மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கோட்டை நீதிவானாகக் கடமையாற்றிய தனுஜா லக்மாலி கொழும்பு பிரதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கோட்டை நீதிவானாக நிலுபுலி லங்காபுரவும், மொரட்டுவை மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய சத்துரிக்கா டி சில்வா கல்கிஸை நீதிபதியாகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# மறைந்த மன்மோகனுக்கு அஞ்சலி செலுத்திய சிறீ



மறைந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்குக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் அஞ்சலி செலுத்தினார்.

அத்துடன் அங்கு வைக்கப்பட்டிருந்த அஞ்சலிக் குறிப்புப் பதிவேட்டிலும் ஈழத்தமிழர்கள் சார்பிலான இரங்கல்களை அவர் பதிவு செய்தார்.

## தமிழர் தாயகத்தில்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசியத்தினுடைய தனித்துவத்தை பேணக்கூடிய வகையிலான ஒரு தீர்வை வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி தலைமையிலான அரசிடம் வேண்டுகோள் விடுத்து விண்ணப்பித்து கொள்கிறேன்.

எமது இந்தக் கோரிக்கையை அவர்கள் நியாயமாகப் பரிசீலித்து அதற்கான முன்முயற்சிகளை எடுப்பார்கள் என்றும் வெளிப்பாடுகளைத் தெரியப்படுத்தி எங்களை தனித்துவமாக கணித்து நாங்கள் நின்று பேசக்கூடிய வாய்ப்புக்களை அளித்து ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும் இந்த அரசாங்கத்தை கேட்டு கொள்கிறேன்.

எங்களுடைய கட்சி அங்குரார்ப்பண கூட்டத்தில் தந்தை செல்வா ஆற்றிய உரையில் தமிழ்ப் பேசும் மக்களினுடைய - தமிழ்த் தேசிய இனத்தினுடைய - சுயாட்சியை நோக்கியதான என்ற ஒரு கருத்தை முன்வைத்து, கூட்டாட்சி என்ற சமஷ்டி முறையிலான தீர்வையே அவர் முன்வைத்திருக்கிறார்.

இதற்கமைய கடந்த 75 ஆண்டுகளாக அதையே முன்வைத்து நாங்கள் அரசியல் செய்து வந்திருக்கிறோம். இப்பொழுது எல்லாத் தமிழ்க் கட்சிகளும் கூட அந்த நிலைப்பாட்டிலேயே தான் இருக்கின்றார்கள்.

சமஷ்டி என்ற அந்த நிலைப்பாடே அது. அது பிரிவினை அல்ல. அது பிரிவினைக்கு இட்டுச் செல்லும் என்ற கருத்தோடு நாங்கள் உடன்படவும் இல்லை. நாங்கள் - பிரிவினைவாதிகளும் அல்லர்.

அந்த வகையில் இந்த சமஷ்டி என்ற கருத்தை முன்னெடுத்து பரிசீலித்து விவாதித்து ஒரு தீர்விற்கு வர வேண்டும் என்று கேட்கிறோம்.

இந்த ஆட்சியை பரந்த மனப்பான்மையோடு மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலையில், எளிமையான ஜனாதிபதியாக நாங்கள் பார்க்கக் கூடிய அநுரகுமார இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இடதுசாரி சிந்தனை கொண்டவர் என்பதால் எங்களுடைய உரித்துக்களை வழங்க வேண்டுமென்ற கருத்து அவருடைய மனதில் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

அந்த வகையில் இதற்கான தீர்வை முன்கொண்டு இன ஐக்கியத்தை இந்த நாட்டிலே ஏற்படுத்தியவராக அவர் மிளிர வேண்டுமென்றும் கோருகிறேன். - என்றார்.

## குழந்தை பிறப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையின் வருடாந்த குழந்தைகள் பிறப்பு மூன்றரை லட்சத்திலிருந்து இரண்டரை லட்சமாகக் குறைந்துள்ளதாக தீபால் பெரேரா தெரிவித்தார்.

ஆட்டிசம் மட்டுமின்றி புற்றுநோய், நீரிழிவு நோய் போன்ற நோய்களும் குழந்தைகளை அதிகம் பாதிக்கின்றன எனத் தெரிய வந்துள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

எனவே தற்போதைய சூழ்நிலையில் சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என தீபால் பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

## 'கிளீன் சிறிலங்கா'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடுகள் மற்றும் நாணய நிதியத்திடம் வாங்கிய கடனை கட்டுவதென்றால் உடனடி வழிமுறை கூட இல்லை. நெல் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கையின் கைத்தொழில் துறையும் எதிர்பார்த்த இலாபத்தை அடையவில்லை. இலங்கை அரசாங்கம் "கிளீன் சிறிலங்கா" போன்று, புரையோடி போயுள்ள இனப்பிரச்சினைக்கும் கிளீன் திட்டத்தை கொண்டு வருவார்களாக இருந்தால் உலகத்திலுள்ள தமிழர்களின் நிதியுடன் வடக்கு கிழக்கில் புதிய அபிவிருத்தியை உருவாக்கத் தயார்.

ஆனால் இலங்கையின் பொருளாதாரத்திலும் ஒரு மாற்றத்தை கொண்டு வரும் வகையில் இங்குள்ள பல தொழிற்சாலைகள் இன்னும் இயங்க வைக்க முடியாதுள்ளது. இவற்றை இயக்குவதற்கான பண பலத்தை உலகத்தமிழர்கள் கொண்டுள்ளனர்.

என்னதான் இருந்தாலும் 80 ஆண்டுகளாகவுள்ள இனப்பிரச்சினைக்கு இதயசுத்தியுடன் ஒரு தீர்வைக் காண்பார்களாயின் - அதிலும் இந்த அரசு இதை காணுமாயின் - அது ஒரு புதிய மாற்றத்தை இலங்கைக்கு கொடுக்கும்.

பொலிஸ், காணி அதிகாரங்களை தந்து நாங்கள் சுயாட்சியாக வாழ வழிவிடவேண்டும். எப்பொழுதும் சமாதானமாக பேசுவதற்கு எங்களுடைய சமாதான கதவுகள் திறந்தேயிருக்கும். - என அவர் தெரிவித்தார்.



# மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் இன்று ஆரம்பம்

அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் நாளை ஆரம்பமாகின்றன.

அத்துடன், அனைத்து பாடசாலைகளினதும் மூன்றாம் தவணை எதிர்வரும் 24 ஆம் திகதி நிறைவடையும் என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த வருடத்திற்கான முதலாம் தவணையின் முதலாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் இந்த மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# புலமைப்பரிசில் பரீட்சையில் கசிந்த வினாக்களுக்கு பொது மதிப்பெண்கள்




தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கசிந்த 3 வினாக்களுக்கு உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக "இலவச மதிப்பெண்" வழங்குவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையின் மூன்று வினாக்கள் முன்கூட்டியே வெளியாகி இருந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

அதன் காரணமாக தங்கள் பிள்ளைகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக பெற்றோர்கள் சிலர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தனர்.

இந்த சம்பவம் அநீதமானது என்று குறிப்பிட்டிருந்த உயர் நீதிமன்றம், வழக்கின் தீர்ப்பை நேற்று முன்தினம் வழங்கியிருந்தது.

அதன் பிரகாரம் சம்பவம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் மற்றும் சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியர் ஆகியோர் அரசாங்கத்துக்கு நட்டஈடு வழங்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன், சம்பவம் குறித்து நிபுணர் குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளில் பொருத்தமான ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கும் உத்தரவிடப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் சர்ச்சைக்குரிய மூன்று வினாக்களுக்கும் சகல பரீட்சார்த்திகளுக்கும் பொதுவான புள்ளிகள் வழங்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பட்டறியா உலகம்

பூமிப் பந்தையே கபளீரமாகப் பற்றி, முழு உலகையுமே ஆட்டிப் படைத்து, சுமார் எழுபது லட்சத்துக்கும் அதிகமான மனித்ச் உயிர்களைப் பறித்து, பல கோடிப் பேரை பாதித்து, உலக நாடுகள் அனைத்தையும் பொருளாதார நிலையில் துவளப் பண்ணிய - கண்ணுக்குத் தெரியாத - நுண்ணுயிரியான கொவிட் தொற்றுப் பரவல் ஆரம்பித்த ஐந்தாம் ஆண்டின் பூர்த்தியில் உலகம் இன்று இருக்கின்றது.

இந்தப்பெருந்தொற்றின்பேரழிவில் கிடைத்த பாடங்களை உலகம் சரியாக உள்வாங்கி, தன்னை நேர் சீர்படுத்திக் கொண்டுள்ளதா என்ற கேள்வி இப்போது எழுகின்றது.

இத்தகைய பேரழிவு தரும் பாதிப்புகளை எதிர்வரும் காலங்களில் எதிர்கொள்ளக்கூடிய முன் அனுபவத்தையும் பாடங்களையும், நம்மைக் கடந்து சென்ற இந்தத் தொற்று உலகுக்குத் தந்திருக்கின்றதா என்ற கேள்விக்கு திருப்தியான பதில் இல்லை என்பதுதான் முடிவு.

இத்தகைய மோசமான இயற்கைப் பேரழிவுகளை மனித குலம் எதிர்கொண்டு முகம் கொடுப்பதற்கு, சர்வதேச ரீதியான ஒற்றுமைப்பட்ட முயற்சிகள் மிக மிக அவசியமானவை. நாடுகளின் எல்லைகளைக் கடந்த கூட்டு முயற்சிகள், ஒன்றுபட்ட மனித செயற்பாடுகள் கட்டாயமானவை.

ஆனால், கொவிட் தொற்றுத் தடுப்புத் தொடர்பில் அந்த ஒன்றுபட்ட முயற்சி - கூட்டுச் செயற்பாடு - இன்னும் சாத்தியமாகவில்லை என்பதுதான் இதில் பெரும் துன்பியல் நிலையாகும்.

சீனாவின் வூஹான் நகரில் கொவிட் தொற்றுப் பரவல் ஆரம்பித்து ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகின்ற நிலையில் கொவிட் தொற்றின் தோற்றம் குறித்த தரவுகளைப் பகிர்ந்து கொள்ளுமாறு உலக சுகாதார ஸ்தாபனம் சீனாவை மீண்டும் வலியுறுத்திக் கோரியுள்ளது.

இந்தத் தரவுகளைப் பகிர்வது ஒரு தார்மீக மற்றும் அறிவியல் கட்டாயமாகும் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

நாடுகளிடையே வெளிப்படைத்தன்மை, பகிர்வு மற்றும் ஒத்துழைப்பின்றி, எதிர்காலத்தில் தொற்றுநோய்களைத் தடுப்பதற்கு உலக நாடுகளைத் தயார்ப்படுத்த முடியாது எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

விஞ்ஞானிகள் பலர் இந்தக் கொவிட் தொற்று இயற்கையாகவே விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவியதாகக் கருதுகின்றனர். இருப்பினும், சீனாவின் வூஹான் நகரில் உள்ள ஓர் ஆய்வகத்திலிருந்து இது ஆரம்பத்தில் பரவியிருக்கலாம் என்ற சந்தேகமும் நிலவுகிறது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வலியுறுத்தல் தொடர்பில் சீனா இன்னமும் ஆக்கபூர்வமாகப் பதிலளிக்கவில்லை எனச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பின்புலத்திலேயே இந்த மோசமான பெருந்தொற்றின் ஐந்தாம் ஆண்டு நிறைவை உலகம் இப்போது எதிர்கொள்கின்றது.

எது எப்படியாயினும், இந்தப் பெரும் தொற்று ஏற்படுத்திய பேரழிவிலிருந்து உலகம் ஓரளவு மீண்டெழுந்து விட்டது. ஆயினும் அது ஏற்படுத்திய பாடத்தை - அனுபவத்தை - சரியாக உள்வாங்கிப் புரிந்துகொண்டு, எதிர்காலத்தில் இது போன்ற சவால்களுக்கு முகம் கொடுப்பதில் இன்னமும் சரியான செயற்போக்கில் உலகம் தயாராகவில்லை என்பதுதான் உலக சுகாதார ஸ்தாபனத்தில் அறிக்கைகள் மூலம் தெளிவாகின்றது.





# பொருளாதார கட்டமைப்பிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தயார்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

"எமது பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தேவையான பொருளாதார நிகழ்ச்சி நிரலை இந்த புத்தாண்டில் நடைமுறைப்படுத்த தயாராக உள்ளோம்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

"கிளீன் ஶ்ரீலங்கா" வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் வகையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

"பொது மக்களின் செயலூக்கமான பங்களிப்புடன் மாத்திரமே "கிளீன் ஶ்ரீலங்கா" வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

2025 இற்குள் காலடி எடுத்து வைக்கும் இந்த சந்தர்ப்பம் புதிய வருடமொன்றின் ஆரம்பம். புதிய வருடத்தின் உதயம்



என்று கூறலாம். எனவே பல தசாப்தங்களாக, எமது நாட்டில் இவ்வாறான பல வருடங்கள் கடந்து சென்றுள்ளன. நாம் நல்ல விடயங்களுக்குள் காலடி வைத்தோமா என்ற

தொடர்ச்சி▼

















# பொருளாதார கட்டமைப்பிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தயார்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

கேள்விக்குறி எமக்குள் இருக்கிறது. கடந்த ஒவ்வொரு வருடங்களும் சிறந்த விடயங்களுக்காக புதுப்பித்துக் கொண்டு முன்னோக்கிச் சென்றோமா? இன்றேல் மோசமான விடயங்களை புதுப்பித்து கடந்த காலத்திற்குச் சென்றோமா? என்ற பிரச்சினை எம்முன் உள்ளது. அதனால் இந்த புத்தாண்டுடன் எமது நாட்டை புதிய மாற்றத்துக்கு உட்படுத்தும் நிரந்தரமான நோக்கம் எமக்கு உள்ளது. அதற்கான கடமையும் பொறுப்பும் எம்மை சார்ந்திருக்கிறது. நானும் எனது அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் அனைத்து அரசியல் தரப்புக்களும் இதற்கான அர்ப்பணிப்பை செய்வோம்.

எமது நாட்டில் புது வருடம் புதியதொரு அரசியல் கலாச்சாரத்துடன் ஆரம்பமாகிறது. இந்த நாட்டை கட்டியெழுப்ப நாங்கள் அடித்தளம் இட்டிருக்கிறோம். அரசியல் கலாசாரம், வீண் விரயம், குடும்ப வாரிசுகள், எல்லையை மீறி அதிகாரத்தை பயன்படுத்தல், அதிகாரத்தை மக்களுக்கு எதிராக பயன்படுத்தல், மக்களுக்கு மேலாக இருக்கும் அரசியல்வாதிகளாக இருத்தல் என்ற அனைத்தையும் இல்லாமல் செய்து மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய, மக்களின் தேவையுடன் இசைந்து செல்லக்கூடிய ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம். புதிய வருடத்தின் சவால்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய திட்டங்களை நாம் வகுத்திருக்கிறோம்.

கடந்த காலங்களில் எமது பொருளாதாரம் வங்குரோத்தான நிலையில் காணப்பட்டது. தற்போது பொருளாதாரத்தை மேலோட்டமாக பார்க்கும் போது நிலைபேறான தன்மையை உருவாக்கியிருக்கிறோம். கடந்த வருடத்தின் நடுப்பகுதியில் வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கான வாய்ப்பு நமக்கு கிடைத்திருந்தது. நிதி அமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், அதிகாரிகள், அரசியல் துறை என்பன பாரிய முயற்சியை மேற்கொண்டதாலேயே அந்த இலக்கை அடைய முடிந்தது. எனவே பொருளாதாரத்தை ஸ்திரமடையச் செய்ய எம்மால் முடிந்திருக்கிறது. அது போதுமானதல்ல. எமது பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் புதியவையாக அமைந்துள்ளன. அதற்காக அரசியல் வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பித்திருக்கிறோம்.

அதேபோன்று எமது நாடு பல்வேறு சந்தர்ப்பங்களில் பல வகையில் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியிருந்தது. எமது நாட்டின் பாதுகாப்பை மிகச் சிறப்பாக உறுதிப்படுத்த எம்மால் முடிந்துள்ளது என்பதை மிக மகிழ்ச்சியுடனும் உறுதியாகவும் கூறுகிறோம். கடந்த வருடத்தில் அறுகம்பையை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படலாம் என்ற தகவல் கிடைத்திருந்தது. எமது பொலிஸார், எமது புலனாய்வுத் துறையினர், எமது முப்படையினர் விறுவிறுப்புடன் செயலாற்றி நாட்டின் ஸ்திரத்தன்மையையும் பாதுகாப்பையும் உறுதிபடுத்தியுள்ளனர். அதேபோல் நாட்டிக்குள் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கான பலமான வேலைத்திட்டம் எமக்கு இருக்கிறது. எமது நாட்டில் நீண்ட காலமாக சட்டத்தின்



ஆதிக்கம் கருத்தில்கொள்ளப்படாத நிலைமை காணப்பட்டது.

குறிப்பாக குற்றவாளிகளும் மோசடிக்காரர்களும் சட்டத்துக்கு மேலாக இருக்கும் வகையில் அரசியல்

துறை இருந்தது. தனக்கு தேவையான மற்றும் தாம் நினைத்தவாறு சட்டத்தை மீறிச் செல்லும் நிலைமை காணப்பட்டது. அரசியலமைப்பை மீறினர். எமது நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் அரசியலமைப்பை மீறியிருப்பதாக பல சந்தர்ப்பங்களில் உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் முதல் பிரஜை சட்டத்தின் ஆதிக்கத்தை சிதைக்கும் நாட்டில், சட்ட ஒழுங்கு பற்றி என்ன பேசுவதோ என்பதை கேட்கிறேன். எனவே நாம் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்த பாரிய முயற்சிகளை மேற்கொள்கிறோம். அதேபோல் எமது நாட்டின் அரச

கட்டமைப்பு, அரசியல் கட்டமைப்பு மற்றும் முழு சமூகத்திற்குள்ளும் ஊழல் மோசடி, வீண் விரயம் என்பன பரவியுள்ளன. எமது முழு நாட்டுக்குள்ளும் புற்றுநோயினைப் போல பரவியுள்ளது.

ஊழல் மோசடியை நிறுத்த நாம் பாரிய முயற்சிகளை எடுக்க வேண்டியுள்ளது. அதற்குள் எமது நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பெரும் பணி உள்ளது. அதற்கான பணியை ஆற்றுவதற்கு தேவையான ஒத்துழைப்பை சட்டமா அதிபர் திணைக்களம் வழங்குமென நம்புகிறேன்.

அதேபோல் குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றக் கட்டமைப்புக்கு மீண்டும் எமது நாட்டை ஊழல், மோசடி அற்றதாக மாற்றுவது தொடர்பிலான பணிக்காக அர்ப்பணிக்கும் என்று நம்புகிறோம். அரசியல் அதிகார தரப்பு என்ற வகையில் செயற்பாடுகள் வாயிலாக ஊழலை தடுக்கவும் மோசடியை தடுக்கவும் நாம் முன்மாதிரியாக செயற்படுவோம். ஆனால் அரசியல் தரப்பின் முன்னுதாரணமும் தலையீடும் மாத்திரம் போதுமானதல்ல. அதற்கான அரச நிறுவனங்கள் தம்மீதான பொறுப்புக்களை சரியாக புரிந்துகொண்டு அந்த மாற்றத்திற்கு தேவையான உதவி, ஒத்துழைப்புக்களை எமக்கு வழங்குமாறு கோருகிறேன்.”– என்றார்.



# முறைப்பாடுகளைப் பதிவு செய்ய 'இ-டிராஃபிக்' செயலி அறிமுகம்




போக்குவரத்து விதி மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பொதுமக்கள் பதிவு செய்வதற்காக "இ-டிராஃபிக்" என்ற கையடக்க தொலைபேசி செயலி பொலிஸால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

"க்ளீன் ஶ்ரீலங்கா - 2025" திட்டத்திற்கு இணையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு பிரவேசித்து இந்த செயலியை இலகுவாகத் தரவிறக்கம் செய்ய முடியும்.

அந்த செயலி மூலம் பொதுமக்கள் தங்களது முறைப்பாடுகளை உடனடியாக முன்வைக்க முடியும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த கையடக்க தொலைபேசி செயலியைப் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

நாளாந்தம் இடம்பெறும் வாகன விபத்துக்களைக் குறைத்துக் கொள்வதற்குப் பொதுமக்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இ-டிராஃபிக்" என்ற கையடக்க தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# முன்னாள் ஜனாதிபதி, பிரதமரிடம் வாக்குமூலம் பெற நடவடிக்கை!

மருந்துகள் பற்றாக்குறை என்ற போர்வையில் இந்தியக் கடனுதவியின் கீழ் 182 வகையான மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி வழங்கியமை தொடர்பாக அடுத்த வாரம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரிடம் வாக்குமூலம் பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என குற்றப் புலனாய்வுத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்று கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

தற்போது இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாடு திரும்பிய பின்னர், இந்த விவகாரம் தொடர்பில் அவரிடம் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடமும் வாக்குமூலம் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர்களது வசிப்பிடங்களுக்குச் சென்று அவர்களிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்கான திகதி மற்றும் நேரங்களை பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல 2022 செப்டெம்பர் 26ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தில் நாட்டுக்கு என்ன மருந்துகள் தேவை என்பது தொடர்பாக அமைச்சரவை உறுப்பினர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்ய வேண்டும் என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மிஸ் லக்மினி கிரிஹாகம விடுத்த கோரிக்கையை ஏற்று மாளிகாகந்த நீதிவான் லொச்சனி அபேவிக்ரம வீரசிங்க குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு வழங்கிய அனுமதியின் பிரகாரம் அமைச்சரவைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டதன் அடிப்படையில், குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்திய அமைச்சரவை அமைச்சர்கள் குற்றப் புலனாய்வுத்துறைக்கு அழைக்கப்பட்டனர்.



# புத்தாண்டு கொண்டாட்ட விபத்துகளில் 2 இளைஞர்கள் உயிரிழப்பு; 57 பேர் காயம்



புதுச்சேரியின் பல்வேறு பகுதிகளில் புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது ஏற்பட்ட விபத்துகளில் சிக்கி இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். 57 பேர் காயமடைந்துள்ளனர்.

புதுச்சேரியில் ஆங்கில புத்தாண்டு பிறப்பையொட்டி நேற்று முன்தினம் நள்ளிரவு, புதுச்சேரி கடற்கரை சாலை, பாண்டி மெரினா, சின்ன வீராம்பட்டினம் ஈடன் கடற்கரை உள்ளிட்ட முக்கிய இடங்களில் பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் ஒன்று கூடி, கேக் வெட்டியும், இனிப்புகளை வழங்கியும் புத்தாண்டை வரவேற்றனர்.

மேலும் நகரம் மற்றும் கிராமங்களில் முக்கிய சாலைகளில் இருசக்கர வாகனங்களில் இளைஞர்கள் உற்சாகமாக வலம் வந்தனர். சிலர் அசுர வேகத்தில் சீறிப் பாய்ந்தனர். இந்நிலையில், புத்தாண்டு கொண்டாட்டத்தில் விபத்தில் சிக்கி பலர் காயமடைந்தனர். 2 பேர் உயிரிழந்தனர்.

புதுச்சேரி முத்திரையர்பாளையம் நெல்லுமண்டி வீதியைச் சேர்ந்த அருள்பாண்டியன் (வயது 33), அரியூர் பகுதியை சேர்ந்த தேவராஜ் (வயது 21) ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துக்கள் குறித்து புதுச்சேரி கிழக்கு பகுதி போக்குவரத்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதுமட்டுமின்றி புதுச்சேரி முழுவதும் பலரும் விபத்தில் சிக்கினர். குறிப்பாக 57 பேர் விபத்தில் சிக்கி புதுச்சேரி அரசு பொது மருத்துவமனை, கதிர்காமம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு பெற்றனர். இது குறித்து கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு பிரிவு போக்குவரத்து பொலிஸ் நிலைய பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆர்ப்பாட்ட அரசியலை கையிலெடுத்தது அ.தி.மு.க.



பதினோராவது முறையாகவும் தோற்க முடியாது என்பதால் 2026 தேர்தலை மானப்பிரச்சினையாக கையில் எடுத்திருக்கிறது அ.தி.மு.க. அதற்காக மக்கள் பிரச்சினைகளை முன்னிறுத்தி போராட ஆரம்பித்திருக்கிறது அந்தக் கட்சி.

கடந்த டிசம்பர் 15 ஆம் திகதி சென்னை வானகரத்தில் நடைபெற்ற அ.தி.மு.க. செயற்குழு, பொதுக்குழு கூட்டத்தில் பேசிய கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி,

"கட்சியில் நீண்ட காலம் பதவி சுகம் அனுபவித்தவர்கள் பணத்தை செலவழிக்க வேண்டும். ஆளுங்கட்சிக்கு எதிராக ஒவ்வொரு மாவட்டச் செயலாளரும் தேர்தலுக்குள் 10 ஆர்ப்பாட்டங்களையாவது நடத்த வேண்டும்." என்றார். இது அ.தி.மு.க. தொண்டர்களுக்கு உற்சாக மருந்தாய் அமைந்தது.

அமைச்சர்களாக இருந்து அதிகாரத்தை சுவைத்தவர்கள் பணத்தை வெளியில் எடுத்தால் தான் என்ன... என்ற தங்களின் மைண்ட் வாய்ஸை கே.பி. முனுசாமி சத்தமாக பேசிவிட்டதாகவே தொண்டர்கள் மகிழ்ச்சியடைந்தனர். முனுசாமியின் குரலை எடப்பாடி பழனிசாமியும் முன்மொழிந்ததை அடுத்து அதற்கு பலனும் கிடைக்க ஆரம்பித்துள்ளது.

புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கோரி விழுப்புரத்தில் ஆர்ப்பாட்டம், மதுரை அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டம், பேராவூரணி பேரூராட்சி முறைகேடுகளை கண்டித்து ஆர்ப்பாட்டம் - என அ.தி.மு.கவின் போராட்ட அறிவிப்பு பட்டியல் நீள்கிறது. இதைத் தானே எதிர்பார்த்தோம் என்பது போல் அ.தி.மு.க. தொண்டர்களும் உற்சாகத்துடன் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்று வருகின்றனர்.

இந்நிலையில், அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் விவகாரம் ஆளுங்கட்சியை பதம்பார்க்க அ.தி.மு.கவுக்கு இன்னொரு அஸ்திரமாக கிடைத்துள்ளது.


லண்டனில் அரசியலை படித்துத் திரும்பி இருக்கும் அண்ணாமலை சாட்டையடி, மகளிர் நீதிப் பேரணி உள்ளிட்ட வினோத போராட்டங்கள் மூலம் மக்களை ஈர்த்து வருகிறார். இதன் மூலம் தமிழகத்தில் பிரதான எதிர்க்கட்சி நாங்கள் தான் என நிரூபிக்க முயல்கிறது பா.ஜ.க. அதற்கு இடம் தராமல் தனது இடத்தை தக்க வைக்க வேண்டிய நெருக்கடி அ.தி.மு.கவுக்கு இருக்கிறது.

இதுகுறித்து அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.பொன்னையன் கருத்து தெரிவிக்கையில்,

"ஊடகங்களும், சமூக ஊடகங்களும் தி.மு.க. அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. நாங்கள் நடத்தும் மக்கள் நலன் சார்ந்த போராட்டங்கள் மூலம், அதே ஊடகங்களும், சமூக ஊடகங்களும் 2026 தேர்தலின்போது எங்களை நோக்கி திரும்பும். அதற்காக பல புதிய வியூகங்களை அமைத்து வருகிறோம்.

அ.தி.மு.க. நடத்தும் ஆர்ப்பாட்டங்கள், 2026 தேர்தலில் நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தி, ஆட்சியமைக்க உதவும். அண்ணாமலையின் அரசியலை, அ.தி.மு.க. அரசியலுடன் ஒப்பிட முடியாது. அ.தி.மு.க. மக்கள் பிரச்சினைகளுக்காக போராடி வருகிறது. அண்ணாமலை, அதானிகளின் நலனுக்காக போராடக் கூடியவர். அவரது அரசியலும், போராட்டங்களும் விளம்பரத்துக்காக செய்யப்படுகிறது. மக்கள் நலனுக்காக இல்லை. இதை தமிழக மக்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள்." - என்றார்.

தேர்தலுக்கு சில மாதங்கள் முன்னதாக ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்களை நடத்தி ஆட்சியைப் பிடிப்பது ஜெயலலிதா 'ஸ்டைல்'. அந்த வகையில் இப்போது ஆர்ப்பாட்டங்களை நடத்த ஆரம்பித்திருக்கிறார் பழனிசாமி.



# அமெரிக்காவில் புத்தாண்டு தினத்தில் கோர விபத்து; 10 பேர் உயிரிழப்பு

புத்தாண்டு தினமாகிய நேற்று அமெரிக்காவின் நியூ ஆர்லியன்ஸ் பகுதியில் கூடியிருந்த மக்கள் மீது கார் ஒன்று மோதியதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். 30 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய காரை செலுத்திய சாரதி, மக்கள் கூட்டத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் தொடர்பில் தகவல்கள் வெளியாகவில்லை.

நியூ ஆர்லியன்ஸ் - போர்பன் தெருவில் நடந்த புத்தாண்டு கொண்டாட்டங்களுக்காக ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தத நிலையில். இந்த விபத்து ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் தலைநகர் மீது ரஷ்யா ஆளில்லா விமானத் தாக்குதல்




உக்ரைன் தலைநகர் கிய்வ் மீது ஆளில்லா விமானத் தாக்குதலை ரஷ்யா நடத்தியுள்ளது.

நேற்று அதிகாலை நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் 6 பேர் காயமடைந்துள்ளனர். 2 கட்டடங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன என அந்நாட்டு நகர அதிகாரிகள் தெரிவித்தனர்.

ட்ரோன்கள் நகரத்தை நெருங்கி வருவதாக விமானப்படை விடுத்த எச்சரிக்கைக்கு அமைய வான் பாதுகாப்பு எதிர்த்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் சேதமடைந்த கட்டடங்களின் தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்பு வீரர்கள் மற்றும் மாநில அவசர சேவைப்பிரிவினர் இணைந்து செயற்பட்டுள்ளனர்.

புத்தாண்டு தினத்தில் இடம்பெற்ற தாக்குதல் குறித்து உக்ரைனின் துணை பிரதம மந்திரி யூலியா ஸ்விரிடென்கோ தனது கண்டனத்தை எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

# பொதுமக்களுக்கு அரச உத்தியோகத்தர்கள் பொறுப்புணர்வுடன் சேவையாற்ற வேண்டும்

## புத்தாண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் சத்தியசீலன் தெரிவிப்பு



பொதுமக்களுக்கு அரச சேவை மீதுள்ள நம்பிக்கையீனத்தை மாற்ற வேண்டியது ஒவ்வொரு அரச உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும் என்று பருத்தித்துறை பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. முதல்நாள் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வைத் தொடர்ந்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நடைபெற்ற "தூய்மையான இலங்கை" தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நேரலை ஊடக இணைந்திருந்தனர்.

அந்த நிகழ்வு முடிவடைந்த பின்னர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த பிரதேச செயலாளர்,

"பொதுமக்கள் அனைவருக்கும் இலகுவான மக்கள் சேவையை அரச உத்தியோகத்தர்களாகிய நாம் வழங்க வேண்டும். பொதுமக்கள் மீது தனிப்பட்ட ரீதியில் பழிவாங்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளாது அரச சேவைக்குரிய நியமத்துடன் சேவையை நாம் நிகழ்த்திச் செல்ல வேண்டும்.

நாங்கள் இந்த வருடத்துக்கான வேலைத்திட்டங்கள், கடமைகளைச் சிறப்பான முறையில் ஆரம்பித்து பொது மக்களுக்கான சேவையை கிராம மட்டத்திலும், பிரதேச செயலக மட்டத்திலும் சிறப்பான முறையில் வழங்க வேண்டும்.

கடந்த வருடம் எங்களுக்குக் கிடைக்கப் பெற்ற பெருமளவான நிதியைச் சிறப்பான முறையில் பயன்படுத்தி வேலைத்திட்டங்களை நிறைவு செய்துள்ளோம்.

பொதுமக்களுக்கு அரச சேவை தொடர்பில் புரிந்துணர்வு அல்லது நம்பிக்கைத் தன்மை இல்லை. அதனை மாற்ற வேண்டியது அரச அதிகாரிகளின் அல்லது அரச சேவையாளனின் பொறுப்பாகும்.

எந்தவொரு வளர்ச்சியடைந்த நாட்டிலும் அந்த வளர்ச்சிக்குரிய முக்கிய முதுகெலும்பாக அரச துறையினர்தான் பங்களிப்பு செய்துள்ளார்கள். எனவே, எங்களுடைய நாட்டின் அபிவிருத்தியில் இந்த அரச துறையின் பங்களிப்பு மிகவும் அதிகமாக எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, இந்த எதிர்பார்ப்பை இந்த வருடத்திலே நாங்கள் சிறப்பாகச் செய்ய வேண்டும்.

இங்கு மாகாண மற்றும் மத்திய அமைச்சுக்களின் உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றீர்கள். எனவே, உங்களுக்குத் தரப்பட்ட வேலைகளைச் சரியான முறையில் செய்து முடிக்க வேண்டும்.

ஒவ்வொரு அரச உத்தியோகத்தரும் தன்னுடைய வேலையைச் சரியாகச் செய்யும்போதுதான் அது பிரதேசம், மாவட்டம், மாகாணம், தேசிய ரீதியிலே அதன் பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும். எனவே, நீங்கள் ஒவ்வொருவரும் பெறுமதி மிக்க அரச ஊழியர்கள்.

அரச இயந்திரத்தை இயக்குபவர்கள் நீங்கள்தான். எனவே. நீங்கள் சிறப்பான முறையில் அரசின் கொள்கைகள், சட்டங்கள், செயற்றிட்டங்களுக்கு ஏற்ற வகையில் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்." - என்றார்.

# சஜித் கட்சியின் மறுசீரமைப்பு இந்த மாதத்திலிருந்து ஆரம்பம்

## தலைமைப் பதவியில் மாற்றம் இல்லை என்கிறார் நளின் பண்டார

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் மறுசீரமைப்பு நடவடிக்கை இந்த மாதத்திலிருந்து ஆரம்பமாகும் எனவும், கட்சித் தலைமைப் பதவியில் மாற்றம் வராது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய அரசியல் வேலைத்திட்டம் இந்த மாதத்திலிருந்து முன்னெடுக்கப்படும். கட்சியின் விசேட கூட்டமும் நடத்தப்படும். கட்சி மறுசீரமைப்புப் பணியும் ஆரம்பமாகும். சில பதவிகளில் மாற்றம் வரும். அது மக்கள் எதிர்பார்க்கும் மாற்றமாக இருக்கும்.

கட்சித் தலைமைப் பதவியில் மாற்றம் வராது. ஆனால், தனக்குள்ள பலவீனங்களை இனங்கண்டு அவற்றைச் சரி செய்வதற்குரிய நடவடிக்கையில் கட்சித் தலைவர் ஈடுபட வேண்டும். மக்கள் அதனையே எதிர்பார்க்கின்றனர்.

அதேபோல் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இணைப்பு தொடர்பிலும் அதானம் செலுத்தப்பட்டுள்ளது." - என்றார்.



# இன்றைய ராசி பலன்கள் - 02.01.2025




இன்று உற்சாகத்துடன் நீங்கள் செய்யும் எந்த ஒரு செயலும் உங்களுக்கு சாதகமாக அமையும். சில ஏமாற்றங்கள் காணப்படும். அவைகள் மூலம் தடை ஏற்பட அனுமதிக் காதீர்கள். உங்கள் செயல்களை தொடர்ந்து செய்யுங்கள்.

உங்கள பணியில் சில போராட்டங்கள் சந்திக்க நேரும். ஆனால் உங்கள் பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்றுவதன் மூலம் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். நிதிநிலையை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று பலகீனமாகவும் சோர்வாகவும் இருப்பீர்கள். தியானம் மேற்கொள்வது நல்லது.




இந்த நாளில் மாபெரும் மாற்றங்கள் ஏற்படலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது. அவர்களின் மூலம் சில இடையூறுகள் ஏறபடும்.

உங்கள் உறவில் அகந்தை மனப்பான்மை காணப்படும். இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதிநிலை உங்கள் எதிர்பார்ப்பின் படி அமையாது. செலவுகள் அதிகமாக இருக்கும். சேமிப்பை பராமரிக்க இயலாது.

தோள்களில் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறை யான உடற்பயிற்சி உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் அணுகு முறை யில் விட்டுகொடுத்து செல்லும் போக்குக் காணப்படும்.

உங்கள் மேலதிகாரிகள் மற்றும் சக பணியாளர்களுடன் ஒரு விருந்தில் கலந்து கொள்வீர்கள்.

இன்று உறவில் அன்பு நிறைந்து காணப் படும். அன்பான உணர்வுகளை வெளிப்படுத்து வதன் மூலம் இன்று உறவில் பிணைப்பு அதிகரிக் கும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள் ளது.

இன்று நீங்கள் ஆரோக்கியத்துடன் காணப்படுவீர் கள்.




உங்கள் குடும்பப் பொறுப்புகள் அதிக மாக காணப்படும். எனவே நேர்மையான முறையில் அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

பணிகள் அதிகரித்து காணப்படும். பணி நிமித்தமான பயணம் காணப்படும். முக்கியமான பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும்.

உங்கள் துனையுடன் தொடர்பு கொள்ளும்போது கவனம் தேவை. இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

உங்கள் நிதிநிலைமையைக் கவனமாகக் கையாள வேண்டும். திடீர் செலவுகள் காணப்படும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். என்றாலும் கால் வலியால் அவதிப்பட நேரலாம்.




கூடுதல் பொறுப்புகள் காரணமாக பதட்டம் நிறைந்திருக்கும். பாதுகாப்பற்ற உணர்வு கானபப்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

பணியிடத்தில் அமைதியான அணுகுமுறையை பராமரிக்க வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும் என்பதால் பணிகளை சிறப்பாக திட்டமிட வேண்டும்.

உங்கள் உணர்வுகளை உங்களின் துணையிடம் வெளிப்படுத்துவது எளிதாக உணர்வீர்கள். எதிர்மறை எண்ணங்களைத் தவிர்த்தல் நல்லது.

இன்று நிதி வளர்ச்சி சுமாராக காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும்.

சளி அல்லது இருமல் பாதிப்புகள் காணப்படும். நேர்மறை எண்ணத்தை பராமரிக்க முயலுங்கள்.




நேர்மறை எண்ணங்களை வளர்த் துக் கொள்வது நல்லது. வெளியிடங்க ளுக்கு சென்று வருவதன் மூலம் அமைதி கிடைக்கும்.

பணியில் வெற்றி பெற மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு முறைப்படி ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க விஷயங்களை சகஜமாக எடுத்துக் கொள்வது நல்லது.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் பணத்தை முறையாக செலவு செய்யும் நிலை காணப்படாது.

சரியான நேரத்தில் உணவு உட்கொள்ளுங்கள். அதிக நீரைப் பருகுங்கள். இது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று தன்னம்பிக்கையுடன் அமைதி யான மன நிலையில் இருப்பீர்கள். உங்களின் முக்கியமான செயல்களை செய்து திருப்தி உணர்வை அடைவீர்கள்.

பணியிடத்தில் அனைத்தும் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதி காரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல பிணைப்பு காணப்படும்.இருவருக்கும் இடையேயான புரிந்துணர்வை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

நிதிநிலை சிறப்பாக காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று நீங்கள் ஆற்றலுடன் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




எளிதான மற்றும் திட்டமிட்ட அணுகுமுறை மூலம் இன்று நீங்கள் வளர்ச்சி அடையலாம். உறுதி மற்றும் தைரியம் உங்களை உச்சத்துக்கு அழைத் துச் செல்லும்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். பணியிடத்தில் நன்மையும் பாராட்டும் கிடைக்கும்.

நல்ல புரிந்துணர்வை பராமரிக்க நட்பான அணுகுமுறை தேவை. இது இருவருக்கும் இடையேயான உறவின் பிணைப்பை வலுப்படுத்தும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பை கூட்ட இயலும்.

நீங்கள் இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படு வீர்கள். இன்றிய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.01.2025




ஆன்மீக ஈடுபாடு பலன் தரும். பிறருடன் பழகி அவர்களை நண்பர்களாக ஆக்கிக் கொள்ளலாம்.

நல்ல பலன்களைக் காண கடுமையாக உழைக்க வேண்டும். நீங்கள் சிறிது பணிகளை இன்று முடிப்பீர்கள். சில பணிகள் நிலுவையில் இருக்கும்.

உணர்ச்சிவசப்படுவதன் மூலம் துனையுடனான உறவில் புரிந்துணர்வு பாதிக்கப்படும். ஆரோக்கியமான உறவிற்கு இத்தைகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிக செலவுகள் ஏற்படும். சில கடன்களை அடைக்க நேரும்.

உடல் உழைப்பு காரணமாக தோள்களில் வலி ஏற்படும். தியானம் மூலம் அமைதி பெறலாம்.




இன்று நீங்கள் சுப காரியங்களில் பங்கு கொள்வீர்கள். புதிய நபர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்படுவார்கள். உங்கள் நண்பர்களின் பட்டியல் விரிவடையும்.

உங்கள் பணியில் நற்பெயர் எடுப்பீர்கள். சக பணியாளர்களும் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நல்லுறவை மேம்படுத்த உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று பண வரவு அதிகரித்து காணப்படும். இன்றைய தினம் பங்கு வர்த்தகம் லாபம் தரும் மற்றும் சாதகமாக இருக்கும்.

மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். உங்களை நீங்கள் உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள்.




இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

அதிகரிக்கும் பணிகளை சமாளிக்க நேரும். இதனால் தேவையற்ற தவறுகள் ஏற்படும். பொறுமையுடன் பணிகளைக் கையாள்வது நல்லது.

உங்கள் துணையின் நடத்தை எரிச்சலை ஏற்படுத்தும். அமைதியாக இருந்து அறிவு பூர்வமாகப் பிரச்சினைகளைக் கையாள வேண்டும்.

இன்று நிதிநிலையில் கட்டுப்பாடு காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணியுங்கள்.

செரிமானம் சம்பத்தப்பட்ட பிரச்சினைகள் நேரலாம். வெளியிடங்களில் உணவு உண்பதை தவிர்த்தல் நலம்.




இன்று வெற்றி பெறுவதற்கு விரைந்து முடிவெடுக்க வேண்டும். உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியில் உங்கள் முயற்சிக்கான நன்மதிப்பை பெறுவீர்கள்.முக்கியமான பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். இது இருவருக்கும் திருப்தியை அளிக்கும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. பணம் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று சிறப்பான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




# அரசாங்க அச்சுத் திணைக்கள இணையத்தளம் வழமைக்கு

சைபர் தாக்குதல் காரணமாக தற்காலிகமாக செயலிழந்திருந்த அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மீண்டும் வழமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

சைபர் தாக்குதலை மேற்கொண்டவர்கள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தார்.

இதனிடையே சைபர் தாக்குதலுக்குள்ளான பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ யூடியூப் தளமும் வழமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ YouTube தளம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் மீதான சைபர் தாக்குதல் தொடர்பில் கணினி குற்றத்தடுப்பு பிரிவு விசாரணையை ஆரம்பித்துள்ளது.